# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர் : **தங்கவேல்** நாள் : 22.02.2023

வா.சா.1 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.45</u>

வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள பட்டா எண்களான 42, 130, 433, 434, 436 மற்றும் 300 ஆகிய பட்டாவில் உள்ள நிலங்களை பொறுத்து பாகப்பிரிவினை பத்திரம் ஏதேனும் எழுதிக் கொண்டோமா என்றால், பட்டா எண் 130, 300 ஆகியவைகளில் உள்ள நிலங்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளோம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை இந்த நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றாலும், வழக்குரையிலும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரிதான். அது இந்த வழக்கிற்கு தேவையில்லை என்பதால் முன்னிலைப்படுத்தப்படவில்லை. பொதுவாக பாகப்பிரிவினை பத்திரம் என்பது அனைத்து சொத்துக்களையும் பிரித்துக் கொள்வதற்காகத்தான் ஏற்படுத்தப்படும் என்றால், சரிதான். வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில் மற்ற பட்டா எண்களில் உள்ள சொத்துக்களை ஏன் சேர்க்கவில்லை என்பதற்கான காரணம் கூறமுடியுமா என்றால், அப்போது வசதியில்லை, அதனால் அனைத்து சொத்துக்களையும் சேர்க்கவில்லை.

2) பட்டா எண் 130, 300 ஆகியவைகளில் உள்ள நிலங்களை சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஒரு பதிவு செய்யப்பட்ட பத்திரமாகும், அது எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு ஒரு ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்பதால்தான், அது எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்று என்னால் கூறமுடியவில்லை என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமான பாகப்பிரிவினை பத்திரத்தை மோசடியாக ஏற்படுத்தியதால்தான் அனைத்து சொத்துக்களையும் சேர்க்கவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக வசதி இல்லாததால் சேர்க்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4 பாகப்பிரிவினை பத்திரம் நாங்கள்

அனுபவத்தில் இல்லாத சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தப்பட்டதால்தான், எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களை அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சேர்க்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் எனது தாத்தா விற்பனை செய்த ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருப்பதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அந்த ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால், இல்லை. அவ்வாறு எந்த ஆவணமும் இல்லையென்பதால்தான் இன்றைய விசாரணைக்கு நான் கொண்டு வரவில்லையென்று சொன்னால், சரியல்ல.

3) நான் முதன்மை சாட்சியத்தில் எனது தாத்தா சர்வே எண் 86/2, 86/14 ஆகியவைகளில் உள்ள சொத்துக்களை விற்பனை செய்துவிட்டதாகவும், மற்ற சொத்துக்களை அவர்தான் வைத்திருந்தாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். சர்வே எண் 86/2, 86/14 உள்ள நிலங்களை விற்பனை செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். மேற்கண்ட ஆவணங்கள் இல்லையென்பதால்தான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.35 ஆவணத்தில் புல எண் 95/5 க்கு உரிமைச் சான்று வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். மற்ற வழக்கு சொத்திற்கு உரிமைச் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.35 ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு 14.11.2016 ம் தேதி வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.35 ஆவணத்தில் புலத்தணிக்கை செய்ததாகவோ, அக்கம் பக்கத்து நில உரிமையாளர்களை விசாரித்து வழங்கப்பட்டதாகவே குறிப்பு இல்லையென்று சொன்னால், சரிதான்.

4) வா.சா.ஆ.35, 36 ஆவணங்கள் மனு அளித்து விபரங்கள் வழங்கப்பட்டதாக குறிப்பு இல்லையென்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.35 முதல் 41 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள் என்றால், சரிதான். வழக்கிற்கு பின்னிட்டு மோசடியாக வருவாய் துறையினரின் உதவியுடன் பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால், அவைகள் சட்டப்படி கருத்தில் கொள்ளதக்கவை அல்ல என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது தாத்தா குழந்தாகவுண்டரின் வாரிசு சான்றிதழ் 25.04.2013 ல் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.43 ஆவணம் பட்டா எண் 840 க்கு வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். பட்டா எண் 840 சர்வே எண் 95/5 க்கு சம்பந்தப்பட்டது என்று உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.44 முதல் 48 மற்றும்

வா.சா.ஆ.50, 51 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்றால், சரிதான். மேற்படி ஆவணங்கள் குறித்து மறு வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பிட்டு கூறவில்லையென்று சொன்னால், சரிதான். மேற்படி ஆவணங்கள் 5 ம் பிரதிவாதி தரப்பினர் அல்ல என்றால், சரிதான். வா.சா.ஆ.44 முதல் 48 மற்றும் வா.சா.ஆ.50, 51 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்பதாலும், 5 ம் பிரதிவாதி தரப்பினர் இல்லையென்பதால், மேற்படி ஆவணங்கள் 5 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.51 ன்படியான பட்டா எண் 125 தான் இறுதியான பட்டா என்று ஒப்புக்கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

5) வா.சா.ஆ.51 ல் வழக்கு சொத்தான சர்வே எண் 94/13C குறிப்பிடப்பட வில்லையென்றால், சரிதான். சர்வே எண் 94/13C க்கான பட்டா எண் என்ன என்பதை முதல் விசாரணையில் கூறவில்லை என்றால், சரிதான். அதற்கான பட்டா ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சர்வே எண் 94/13C க்கான பட்டா என்றால், சரிதான். சர்வே எண் 94/13C க்கான பட்டா எண் 1043 ன் 24.06.2022 தேதியிட்ட இணைய வழி நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் 5 ம் பிரதிவாதியின் பெயரும் கூட்டாக உள்ளது என்றால், சரிதான். சர்வே எண் 94/13C க்குண்டான பட்டாவை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று முதன்மை சாட்சியத்தில் காரணம் எதுவும் கூறவில்லை என்றால், சரிதான். முதல் விசாரணை தாக்கல் செய்தபோது சர்வே எண் 94/13C க்கான பட்டா 5 ம் பிரதிவாதி பெயரிலும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியும் என்றால், சரிதான். மேற்படி சர்வே எண் 94/13C க்கான பட்டாவை தாக்கல் செய்தால், 5 ம் பிரதிவாதி மேற்படி சர்வே எண்ணில் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார் என்ற விபரம் தெரிந்துவிடும் என்பதால்தான், நான் அதை தாக்கல் செய்யாமல் தவிர்த்து மோசடியாக செயல்பட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

6) அசல் வழக்கு எண் 14/2014 வழக்கு தாக்கல் செய்தபோதே அதன் வழக்குரையுடன் 5 ம் பிரதிவாதி புல எண் 94 ல் 1994 ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினைப்படி தரப்பினர்கள் அனுபவித்து வரும் நிலங்களை குறித்து அளவுடன் கூடிய வரைபடம் தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் மேற்படி மாதிரி வரைபடம் என்று சொன்னால், அதைப்பற்றி எனக்கு ஞாபகமில்லை. 5 ம் பிரதிவாதி அவர்

அனுபவிக்கும் நிலத்தைச் சுற்றி கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால், அவர் அந்த நிலத்தை அனுபவிக்கவில்லை, கம்பி வேலி யார் அமைத்தார் என்று தெரியாது. கம்பி வேலி பூஸ்திதியில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள்தான் அந்த புல எண் குறித்த புகைப்படங்கள் என்றால், சரிதான். புகைப்படங்கள் 9 எண்ணிக்கை **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கம்பி வேலியை அகற்ற வேண்டும் என்று எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கேட்கவில்லை என்றால், சரிதான். 5ம் பிரதிவாதி அனுபவித்து வரும் நிலங்களை பொறுத்துதான் மேற்படி கம்பி வேலி அமைத்துள்ளார் என்றாலும், 5ம் பிரதிவாதியின் சட்டப்படியான பாத்தியம் மற்றும் அனுபவத்தை ஒப்புக்கொண்டுதான் மேற்படி முள் கம்பி வேலையை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சரியல்ல. சர்வே எண் 94/13C ல் முள் வேலி இல்லை.

7) 5ம் பிரதிவாதி சர்வே எண் 94/13C ல் முள் வேலி அமைத்துள்ளார் என்றாலும், அந்த புகைப்படம்தான் பி.வா.சா.ஆ.8 வரிசையில் உள்ள 8வது புகைப்படம் என்றாலும், இந்த வழக்கிற்காக 5ம் பிரதிவாதி முள் வேலி அமைக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.30 ஆவணமான 26.08.1996 தேதிய சம்மத பத்திரத்தை ரத்து செய்ய இந்த வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால், சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது வா.சா.ஆ.30 ஆவணம் குறித்த விபரம் தெரிய வரவில்லை, அதனால் பரிகாரம் கோவில்லை. வா.சா.ஆ.30 ஆவணமான தாக்கல் செய்த பிறகும், அந்த ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.30 ஆவணத்தில் கண்டுள்ள நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.30 ஆவணத்தில் கண்டுள்ள சர்வே எண் 95/5 என்பது இந்த வழக்கு சொத்து என்றால், சரிதான்.

8) வா.சா.ஆ.30 ஆவணம் 28.06.1996ல் எழுதப்பட்டு, பதிவுக்காக தாக்கல் செய்யப்பட்டு நிலுவை ஆவணமாக வைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.30 ஆவணமானது ஆவண எண் 784/2014 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் முதன்மை சாட்சியத்தில் வா.சா.ஆ.30 ஆவணத்தின் விபரங்கள் முன்பே தெரிய வராத காரணத்தில்தான், அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை

என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.30 ஆவணத்தைப்பற்றி முன்பே நன்கு தெரியும் என்றாலும், இருப்பினும் அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.19 ஆவணத்தை இல்லா நிலையது என விளம்புகை செய்ய கோரியுள்ள நிலையில், அதிலுள்ள அனைத்து தரப்பினர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.19 ஆவணத்தில் உள்ள தரப்பினர்களை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தினால், அவசிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்ற கோதாவில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

9) நான் வழக்குரை பத்தி 10ல் 2 முதல் 4 பிரதிவாதிகள் கடந்த 17.05.2014ம் தேதியில் தாவா சொத்தில் எனது அனுபவத்தை இடையூறு செய்ததாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். வழக்குரையில் பக்கம் 12, 15ல் நான் 10.05.2014ல் கையொப்பம் செய்ததாக உள்ளது என்றால், சரிதான். பொய்யான மற்றும் கற்பனையான சங்கதிகளின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால்தான், 17.05.2014ம் தேதி வழக்கெழு மூலம் ஏற்பட்டதாக 10.05.2014ம் தேதிய வழக்குரையில் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வழக்குரையில் A, B என்று இரண்டு பட்டிகைகளாக சொத்துக்களை குறிப்பிட்டுள்ளோம் என்றால், சரிதான். இதில் A பட்டிகை சொத்து எனது தகப்பனாரான 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது, B பட்டிகை சொத்து எனது சித்தப்பா 2ம் வாதியான ராஜி-வுக்கு பாத்தியப்பட்டது. வழக்குரை சங்கதிகளின்படி A, B பட்டிகை சொத்துக்கள் தனித்தனி நபர்களுக்கு, தனி தனியே பாத்தியப்பட்டவை என்று சொன்னால், சரிதான்.

10) வழக்குரையில் A, B பட்டிகை சொத்துக்களின் உரிமையாளர்கள் என விளம்புகை செய்ய ஒரே பரிகாரம் கேட்டு ஒரே நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டு உள்ளது என்று சொன்னால், சரிதான். A, B பட்டிகை சொத்துக்களை பொறுத்து தனித்தனியாக விளம்புகை பரிகாரம் கோராமல், தனித்தனி நீதிமன்ற கட்டணமும் செலுத்தாத நிலையில், இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு புல எண் 94/14Aல் சுவாதீனத்தில் உள்ள மா.காளிக்கவுண்டர் மற்றும் அவரது மகன் பழனிசாமி, மகள் தங்கமணி ஆகியோர்களை இந்த வழக்கில் சேர்க்காத நிலையில், இந்த வழக்கானது அத்திய அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

11) வழக்கு சொத்துக்களை பொறுத்து 1965ம் ஆண்டு இனாம் ஒழிப்பு மூலம் தனித்தனி பட்டா வழங்கப்பட்டு தரப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றாலும், பின்னிட்டு நில உடமை மேம்பாட்டு திட்டத்தின்போது தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதினால், புல எண் 94, 95ல் உள்ள நபர்களுக்கு அதை அனுபவிப்பதில் சிரமம் ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. அதனால் 1994ம் ஆண்டு அனைத்து தரப்பினர்களும் கலந்து பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால், சரியல்ல. அதனடிப்படையில் சர்வே எண் 94/8ல் இருந்த கிணறு ஆனது மூடப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. அதனடிப்படையில்தான் பொது தடமானது புல எண் 94ல் நேராக அமைக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. அந்த வாய்மொழி பாகப்பிரிவினையின்படி 5ம் பிரதிவாதிக்கு புல எண்கள் 94/1, 2, 3, 4, 94/11**B**, 12**A**, 13**A**, 13**C**, 20 ஆகியவற்றில் 57 செண்ட் நிலமானது ஒதுக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. எங்கள் குடும்பத்திற்கு 94/5**A**, 5**B**, 12**B**, 13**D**, 13**C**ல் 3 ஏர்ஸ், 94/4ல் 5 ஏர்ஸ் ஆக 56 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினையினை ஒப்புக்கொண்டு புல எண் 94, 95ல் நபர்கள் அவரவர்கள் நிலத்தை அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. அதன் அடிப்படையில்தான் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. அனுபவத்தில் இருக்கும் இடத்திற்கும், பட்டாவில் உள்ள இடத்திற்கும் மாறுபாடு இருந்ததால்தான், 1 முதல் 4 பிரதிவாதிகள் பிழைத் திருத்தல் பத்திரம், சம்மதப் பத்திரமும் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னால், சரியல்ல.

12) நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தில் ஏற்பட்ட குளறுபடியை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, 1994ல் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினை மறைத்து வா.சா.ஆ.4 ஆவணத்தை வழக்கு புல எண்களுக்கு மட்டும் ஏற்படுத்தி கொண்டோம் என்று சொன்னால், சரியல்ல. நான் செய்த மோசடி தெரிய வந்துவிடும் என்பதால்தான், எங்களுக்கு வேண்டி நபர்களான பி.கே.ஜெகநாதன் மற்றும் பி.கே.பழனிசாமி ஆகியோர்களை வழக்கு தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. 5ம் பிரதிவாதி அசல் வழக்கு 14/2014 வழக்கை தாக்கல் செய்துவிட்டார் என்பதால்தான், நாங்கள் பொய்யான மற்றும் கற்பனையான வழக்கெழு மூலத்தின் அடிப்படையில், இந்த வழக்கினை உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு புல எண்களில் நான் ஒருபோதும்

சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக சுவாதீனத்தில் இருந்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அதனால்தான் புல எண் 94/13C க்கான பட்டாவில் 5ம் பிரதிவாதியின் பெயர் கூட்டாக சேர்க்கப்பட்டதை ஆட்சேபிக்கவில்லை என்றாலும், அந்த விபரத்தை இந்த நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வில்லையென்றாலும், சரியல்ல.

13) உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு முதன்மை நோக்கிலேயே தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 02.08

ஒப்பம் /தங்கவேல்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.